**பிப்ரவரி – 04**


# TNPSC துளிகள்

- திருவனந்தபுரத்தின் தும்பாவிலிருக்கும் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தால் உருவாக்கப்பட்ட லித்தியம் அயன் மின்கலத் தொழில்நுட்பத்தைப் பரிமாற்றம் செய்வதற்காக 141 நிறுவனங்களின் பட்டியலில் இருந்து 10 நிறுவனங்களை நிதி ஆயோக்குடன் கலந்தாலோசனை செய்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (Indian Space Research Organization - ISRO) தேர்ந்தெடுத்திருக்கின்றது.
    - இந்த லித்தியம் அயன் மின்கலன்கள் உண்மையில் செயற்கைக் கோள்களிலும் ஏவு வாகனங்களிலும் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கின்றன.
- சர்வதேச நாணய நிதியமானது (International Monetary Fund) அதிகரிக்கும் வர்த்தக உரசல்கள் மற்றும் அதிகரித்து வரும் அமெரிக்க வட்டி விகிதங்களைக் காரணம் காட்டி இந்த வருடம் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கான தனது கணிப்பைக் குறைத்திருக்கின்றது. தனது உலகப் பொருளாதாரப் பார்வையில் உலகப் பொருளாதார வளர்ச்சி 2019 ஆம் வருடம் 3.5 சதவிகிதம் வளருமென்றும் 2020-ம் வருடம் 3.6 சதவிகிதம் வளருமென்றும் வளர்ச்சி விகிதத்தைக் குறைத்திருக்கின்றது.
    - இது கடந்த அக்டோபர் மாதத்தில் கணிக்கப்பட்டதை விட முறையே 0.2 மற்றும் 0.1 சதவிகிதம் குறைவாகும்.
- உலக எஃகு உற்பத்தியாளர்கள் அறிக்கையின்படி, இந்தியா உலகின் இரண்டாவது மிகப்பெரிய எஃகு உற்பத்தி செய்யும் நாடாக ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளியிருக்கின்றது.
    - 2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் எஃகு உற்பத்தி 106.5 மில்லியன் டன்களாகும். இது 2017 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்த 101.5 மில்லியன் டன்களிலிருந்து 4.9 சதவிகிதம் அதிகமானதாகும்.
- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகமானது தற்சமயம் அர்ஜென்டினாவில் இந்தியத் தூதராகப் பணியாற்றி வரும் 1993 ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுத் துறை அதிகாரியான சஞ்சீவ் ரஞ்சன் என்பவரை கொலம்பியக் குடியரசிற்கான புதிய தூதுவராக நியமித்திருக்கின்றது.
- உள்நாட்டிலேயே மின் வாகனங்களைப் பொருத்துவதை ஊக்குவிக்கும் வகையில் மின்சார வாகனங்களின் உதிரிபாகங்களின் மீதான இறக்குமதி வரியை 15 - 30 என்ற சதவிகிதத்திலிருந்து 10 - 15 என்ற சதவிகிதமாக அரசு குறைத்திருக்கின்றது.
    - இந்த வரிக் குறைப்பானது 2019 ஆம் ஆண்டு ஜனவரி 30ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.
- நியூசிலாந்திற்கு எதிரான 3-வது மற்றும் இறுதி சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டனான 36 வயது மித்தாலி ராஜ் 200வது சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடும் முதல் பெண் வீரராகியுள்ளார்.
- கோல்ப் வீரர் வாணி கபூர் ஆஸ்திரேலியப் பெண்கள் PGA சுற்றுப் பயணக் கோப்பையைக் கைப்பற்றிய முதல் இந்திய வீரராகியுள்ளார். இது ஆஸ்திரேலியாவில் பல்லாரட் கோல்ப் மைதானத்தில் நடைபெற்ற முதலாவதான தகுதிச் சுற்றுப் போட்டியில் மற்ற மூன்று நபர்களுடன் அவர் வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்து 12-வது இடத்தைக் கைப்பற்றியதால் இந்த வெற்றியைப் பெற முடிந்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## சிப்பெட் – பொன்விழா

- நெகிழிப் பொருட்கள் மற்றும் அது தொடர்பான தொழிற்துறைகளின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட நிறுவனமான மத்திய நெகிழிப் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (Central Institute of Plastics Engineering & Technology - CIPET) தனது பொன்விழாக் கொண்டாட்டங்களைக் கொண்டாடியிருக்கின்றது.
- இந்நிறுவனம் 1968 ஆம் ஆண்டு சென்னையில் ஐக்கிய நாடு வளர்ச்சித் திட்டத்தின் (United Nations Development Programme - UNDP) உதவியுடன் நிறுவப்பட்டதாகும்.




- இதன் இயக்குநரக நிறுவனமாக சர்வதேச தொழிலாளர் நிறுவனம் செயல்பட்டது.
- இந்திய அரசின் ரசாயனங்கள் மற்றும் உரத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ரசாயனங்கள் மற்றும் பெட்ரோலிய ரசாயனங்கள் துறையின் கீழ் நெகிழிப் பொருட்கள் துறையில் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட முதல் கல்வி நிறுவனம் இதுவாகும்.
- இது திறன் மேம்பாடு, தொழில்நுட்ப ஆதரவு சேவைகள், கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றது.
- சென்னையில் தலைமையகம் அமையப் பெற்ற இந்நிறுவனம் பாலிமர் மற்றும் அது தொடர்பான தொழிற்துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாட்டின் பல்வேறு மையங்களில் செயல்பட்டு வருகின்றது.

# தேசியச் செய்திகள்

## சுவச் பாரத் மிகப்பெரும் சவால் விருது

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் 1 முதல் 15 வரை நடைபெற்ற சுவச் பக்வாதா என்ற நிகழ்வின் ஒரு பகுதியாக மத்திய தொழிற்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை “சுவச் பாரத் மிகப்பெரும் சவால்” என்ற போட்டியை நடத்தியது.
- இது நாட்டில் அத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட துவக்க நிறுவனங்களால் வழங்கப்படும் புதுமையான தீர்வுகளுக்கு வெகுமதி அளித்திட நடத்தப்பட்டது.
- பின்வரும் நான்கு பகுதிகள் இந்த சவாலுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன.

- துப்புரவு
- கழிவு மேலாண்மை
- நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை
- காற்று மேலாண்மை



## ஐசோடிரீடினோயின் மீதான CDSCO அமைப்பின் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள்

- கடுமையான முகப்பரு குறைபாட்டிற்கான சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் வாய்வழி மருந்தான ஐசோடிரீடினோயின் என்ற மருந்தைப் பாதுகாப்பாக பயன்படுத்துவது தொடர்பான வழிமுறைகளை மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் (The Central Drugs Standard Control Organisation - CDSCO) வழங்கி இருக்கின்றது.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் மருந்துக் கட்டுப்பாட்டாளர்கள் அம்மருந்தின் விற்பனை, உற்பத்தி மற்றும் விநியோகத்தைக் கண்காணித்திட வேண்டுமென்று அந்நிறுவனம் கூறியிருக்கின்றது.
- அம்மருந்து முறையான ஆலோசனையின்றி உட்கொள்ளப்படாவிடின் பிந்தைய வம்சாவளியினரில் பிறப்புக் குறைபாடுகளை ஏற்படுத்தும்.
- சருமநோய் மருந்துவர்களின் ஆலோசனைப்படி (மருந்துச் சீட்டின்படி) மட்டுமே சில்லறை விற்பனையாளர்களால் அம்மருந்து விற்கப்பட முடியும்.

## முன்கூட்டிய பணம் செலுத்து முறைகளை ஆராய்வதற்கான குழு

- மத்திய மின்சார ஆணையத்தின் கீழ் அரசு மாநில மின் விநியோக நிறுவனங்கள் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கப்படும் முன்கூட்டிய பணம் செலுத்து அமைப்புகளை ஆராய ஒரு குழுவை அமைத்துள்ளது.
- இந்த குழு தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மின் பகிர்மான நிறுவனங்களின் தலைவர்களையும் மத்திய மின் அமைச்சகம் மற்றும் மின்சாரக் கழகங்களில் இருந்து பிரதிநிதிகளையும் கொண்டிருக்கும்.
- இது மின் பகிர்மான நிறுவனங்களிடமிருந்து மின் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் தாமதிக்கப்பட்ட பணமளிப்புகள் தொடர்பான விவகாரங்களை சரிசெய்திடும்.

# சர்வதேசச் செய்திகள்

## 8-வது நூற்றாண்டின் துறவி மீதான சர்வதேச மாநாடு

- இந்தியா மற்றும் பூடான் ஆகிய இருநாடுகளுக்கிடையேயான ராஜ்ஜிய ரீதியிலான உறவுகளை முறைப்படுத்தியதற்கான 50 வருடங்களைக் குறிப்பிடும் வகையில் புதுதில்லியில் 8-வது நூற்றாண்டில் வசித்த இமாலயத் துறவியான குரு பத்மசம்பவா மீதான இரண்டு நாள் சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது.
- இம்மாநாடு அமைதியை மேம்படுத்துவதற்கான மையத்தால் குரு பத்மசம்பவாவின் வாழ்க்கை மற்றும் மரபு என்ற பெயரில் நடத்தப்பட்டது.
- இரு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும் இதில் பங்கேற்று, 8வது நூற்றாண்டில் இந்தியாவில் பிறந்து புத்தமதத்தையும், புத்தமதக் கோட்பாடுகளையும் இமாலயப் பகுதி முழுவதும் பரப்புவதற்காக பூடானிற்கு இடம்பெயர்ந்த துறவி பற்றிய கருத்துக்களை அதில் விவாதித்தனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## 3 வங்கிகள் மீதான தடைகளை ரிசர்வ் வங்கி தளர்த்தியது

- பாங்க் ஆப் இந்தியா, மகாராஷ்டிரா வங்கி மற்றும் ஓரியண்டல் வர்த்தக வங்கி ஆகிய மூன்று வங்கிகளின் மீதான செயல்பாட்டுத் தடைகளை விலக்கிக் கொண்டதோடு "உடனடி சரிசெய்யும் செயல் நடவடிக்கைக் கட்டமைப்பிலிருந்து" அவை முழுமையாக வெளியேறிட அவ்வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அனுமதி அளித்திருக்கின்றது.
- மிகப்பெரிய அளவிற்கு கடன்களை வழங்குவது, பங்கு ஆதாயங்களைப் பகிர்ந்து கொள்வது ஆகியவற்றின் மீது தடைகளை விதிக்கின்ற "உடனடி சரிசெய்யும் செயல் நடவடிக்கை கட்டமைப்பின்" கீழ் கொண்டு வரப்பட்ட 11 பொதுத் துறை வங்கிகளில் இந்த மூன்று வங்கிகளும் அடங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2019 ஆம் ஆண்டில் எல்நினோ மீதான உலக வெப்பமயமாதலின் தாக்கம்

- சமீபத்திய அறிக்கையின்படி மத்திய மற்றும் தென் அமெரிக்கப் பகுதிகளில் கொசுக்களால் பரப்பப்பட்ட நோய்கள் உட்பட உயிரிகளால் பரப்பப்படும் நோய்களின் அதிகரிப்பு ஏற்படக் காரணமாக எல்நினோ இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டிருக்கின்றது.
- மேலும் தெற்கு ஆப்பிரிக்கா, இந்தியா, தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய பகுதிகளையும் பாதிக்கின்ற எல்நினோவால் உண்டாக்கப்பட்ட வறட்சியானது மிகப் பரவலானதாக இருக்கக் கூடும்.
- எல்நினோ என்பது மேற்கு பசிபிக் பகுதியில் ஏற்படும் உயர் அழுத்தக் காற்றினாலும் கிழக்கு பசிபிக் பகுதியில் ஏற்படும் குறைந்த அழுத்தக் காற்றினாலும் உண்டாகும் ஒரு பருவகால சுழற்சியாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது.
- எல்நினோ ஒவ்வொரு 15 வருடங்களுக்கு ஒருமுறையும் ஏற்பட்டு பசிபிக்

வெப்பமண்டலப் பகுதிகளில் கடுமையான வறட்சி, வெள்ளம், தூசிப் படலம் மற்றும் பனிப் பொழிவு ஆகியவற்றை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு லட்சக்கணக்கான டாலர்கள் அளவிற்குப் பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## பன்றிகள் மற்றும் பன்றிக் குட்டிகள் இறக்குமதி மீதான தடை

- மிசோரம் மாநில அரசு அம்மாநிலத்தில் ஆயிரக்கணக்கான பன்றிகளின் உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நோய்களைத் தடுப்பதற்காக பன்றிகள் மற்றும் பன்றிக் குட்டிகள் மீதான இறக்குமதிக்குத் தடை விதித்திருக்கின்றது.
- பன்றிகள் இனவிருத்தி மற்றும் சுவாச அமைப்பு நோய் 2013 ஆம் ஆண்டிலிருந்து மிசோரமில் 10,000க்கும் மேற்பட்ட பன்றிகளின் உயிர்களைப் பலி கொண்டிருக்கின்றது.
- மியான்மரில் பரவலாக அந்த நோய் இருக்கும் என்று நம்பப்படும் வேளையில் அங்கிருந்து இறக்குமதியாகும் பன்றிகள் மற்றும் பன்றிக் குட்டிகள் ஆகியவற்றால் இந்நோய் ஏற்படுவதாக நம்பப்படுகின்றது.
- பன்றிக் காய்ச்சல் எனவும் இந்த நோய் அழைக்கப்படுகின்றது.
- இந்த நோய் பொதுவாக பன்றிகளிலிருந்து பரவுகின்றது. மேலும் மனிதர்கள் மற்றும் பன்றிகள் ஆகிய இருவரையும் அந்நோய் தாக்குகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பாராட்டுக்கான விருது

- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திற்கான இணை அமைச்சர் அஸ்வினி குமார் சௌபேவால் ராஜீவ் நாத் பெருமைமிகு "பாராட்டுக்கான விருது" என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.
- மலிவான மருத்துவத் தொழில்நுட்பத்தை அணுகிடச் செய்வதற்காகவும் நோயாளிகளின் பாதுகாப்பு முயற்சிகளுக்காகவும் சுகாதார மற்றும் பொதுநல சேவைகளில் அவர் ஆற்றிய மதிப்பு வாய்ந்த, குறிப்பிடத்தக்க மற்றும் மேதகு சாதனைகளுக்காக கௌரவிக்கப்பட்டார்.
- மேலும் மத்திய தொழிற்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையால் தேசிய மருந்து உபகரணங்கள் மேம்பாட்டுக் குழுவின் மன்ற உறுப்பினராகவும் ராஜீவ்நாத் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

# முக்கிய தினங்கள்

## உலக ஈரநிலங்களுக்கான தினம் – பிப்ரவரி 02

- ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 02-ம் தேதி உலக ஈரநிலங்களுக்கான தினமாக

அனுசரிக்கப்படுகின்றது.

- இத்தினம் ஈரானிய நகரமான ராம்சாரில் 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி 02-ம் தேதியன்று ஈரநிலங்களுக்கான ராம்சார் ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறிக்கின்றது.
- ஈரநிலங்கள் மற்றும் பருவநிலை மாற்றம் எனும் கருத்துருவுடன் 2019 ஆம் ஆண்டின் உலக ஈரநிலங்களுக்கான தினம் கொண்டாடப்பட்டது.




- இந்த கருத்துரு பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் கணித்து அதற்கேற்ப தகவமைத்துக் கொள்வதில் ஒரு இயற்கையான தீர்வு முறைகளாக ஈரநிலங்களால் வழங்கப்படும் தீர்வுகளின் முக்கியப் பங்கினை உயர்த்திக் காண்பித்திட எண்ணுகின்றது.

- - - - - - - - - - - - - - -